எஸ்.டி.சி எண். 357/2022. தேதி:.06.03.2025

<u>ம.சா.ஆ.1 ஆன திரு.மேகலாராமண்ணா என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. நான் தொலைதூரக்கல்வியில் B.A வரை படித்துள்ளேன். நான் ஐடிஐ யும் முடித்துள்ளேன். நான் தென்னக இரயில்வே துறையில் இரயில் ஓட்டுநராக பணி புரிகிறேன். நான் கடந்த 23 வருடங்களாக வேலையில் உள்ளேன். எனக்கு ஓரளவிற்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். இவ்வழக்கின் புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் எனக்கு தெரியும். எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அந்த சமயம் நான் இரயில்வே துறையில் தான் பணியாற்றினேன். எனது பணி நேரம் குறித்து குறிப்பிட்டு சொல்ல முடியாது. பணி நேரம் மாறி மாறி இருக்கும். எதிரியை வேலை செய்யும் இடத்தில் தான் எனக்கு பழக்கம். எதிரியை எனக்கு 2019 ல் இருந்து தெரியும் என நினைக்கிறேன். எதிரி எனக்கு அறிமுகம் ஆன போது அவர் உதவி ஓட்டுநராக இரயில்வேயில் பணி புரிந்தார். 14.10.2019 அன்று எதிரிக்கு கடன் கொடுத்தேன். நான் கடன் கொடுத்ததற்கு சுமார் 15 நாட்களுக்கு முன்னால் எதிரி என்னிடம் கடன் கேட்டார். மேற்கண்ட சங்கதிகளை நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பணிக்கு செல்வதாக சொல்லும் நிலையில் அங்கு வருகை பதிவேடு பராமரிக்க படுகிறதா என்றால் ஆம்.

2. எதிரிக்கு நான் கைப்பணமாக தான் தொகை கொடுத்தேன். நான் எனது புகார், பிரமாண வாக்குமூலத்தில் மேற்கண்ட சங்கதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த இடத்தில் வைத்து எந்த நேரத்தில் எதிரிக்கு

கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகையை குறிப்பிட்டு எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி என் வீட்டில் வந்து தான் கடன் வாங்கி சென்றார். காலை சுமார் 10.00 லிருந்து 12.00 மணிக்குள் எதிரி என்னிடம் கடன் வாங்கி சென்றார். எதிரிக்கு நான் கடன் கொடுக்கும் போது அவர் பெரம்பூர் கேரேஜ் ஒர்க்ஸ் ல் பணியாற்றினார். அங்கு அவருக்கு வருகை பதிவேடு பராமரிப்பார்களா என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் நான் எனது பணியில் இருந்திருந்தால் எதிரிக்கு கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் 2 , 3 மாதங்களில் தொகையை திரும்ப செலுத்துவதாக சொல்லி என்னிடம் கடன் பெற்றார். மேற்கண்ட சங்கதியை நான் எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை. எதிரி தான் 2 சதவீதம் வட்டி கொடுப்பதாக என்னிடம் கூறினார். எதிரி அவர் கூறிய காலகட்டத்திற்குள் பணத்தை செலுத்த முடியாத நிலையில் அதற்கு பின்னிட்டு தான் எனக்கு வட்டி தருவதாக கூறினார். ம.சா.ஆ.5 ஆனது 16.10.2019 அன்று கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது. ம.சா.ஆ.5 ன் படி 2 சதவீத வட்டி காணப்படுகிறது. நான் அரசு ஊழியராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் கண்ட தொகையை ரொக்கமாக பரிமாற்றம் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அரசு ஊழியர் வேறு தொழில் எதுவும் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும். ஆனால் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை எதிரி தான் வட்டி தருவதாக கூறினார். நான் வருமான வரி முறையாக தாக்கல் செய்து வருகிறேன். எனது வருமானத்தில் நான் சேமித்த

தொகையை தான் எதிரிக்கு கடனாக கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகை உண்மை என்றால் அது குறித்து எனது வருமான வரி கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது PAN Card எண் எனக்கு ஞாபகம் இல்லை. ம.சா.ஆ.5 ல் எனது விவரங்கள் அனைத்தும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரியின் விவரங்கள் உட்பட அனைத்தும் எழுதப்பட்டுள்ளது என்றால், எதிரி தான் ம.சா.ஆ.5 ஐ தயார் செய்தார். நான் கூறுவது போல் ம.சா.ஆ.5 ஐ எதிரி தயார் செய்திருந்தால் அனைத்து விவரங்களும் தட்டச்சு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் வட்டி தொழில் செய்து வருவதாலும் அதனால் தான் தட்டச்சு செய்யபட்ட புரோநோட்டுகளை தயார் செய்து வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் எந்த இடத்தில் வேலை குறித்து Report செய்வேன் என்றால் Reporting இடம் மாறி மாறி இருக்கும். எனவே குறிப்பிட்டு சொல்ல முடியாது.

(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.